# நீதி நூல்கள் காட்டும் அறத்தின் வலிமை

**முனைவர் செ. காஞ்சனா**
கௌரவ விரிவுரையாளர்
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

மக்களின் வாழ்க்கையானது அன்பு, நன்றி, கருணை என்ற மூன்றின் அடிப்படையில அமைய வேண்டும். நல்லவர்களாய் வல்லவர்களாய் ஒழுக்கசீலர்களாய், உயர்ந்தோராய் உன்னத வாழ்க்கை வாழ வேண்டும் எனவும் தமிழ் மக்கள் உலக மக்களுக்கு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்பதற்காகவும் அறக்கருத்துக்கள் அடங்கிய பல்வேறு நீதி நூல்களைப் பயனுள்ளவகையில் புலவர்கள் யாத்தனர். இந்நூல்கள் எவ்வாறு அறத்தின் வலிமையை உணர்த்துகின்றன என்பதை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

### திருக்குறள் காட்டும் அறத்தின் வலிமை

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் விலக்கி நடப்பதே அறமாகும் என்பதை,

**“அழுக்காறுஅவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்”** **(குறள்.35)**

என்ற குறளின் வழி அறியலாம்.

அறம் சிறப்பையும் செல்வத்தையும் தரும், ஆகையால் உயிர்க்கும் ஆக்கத்தைத் தருவது அத்தகைய அறத்தைக் காட்டிலும் வேறு இல்லை என்பதை,

**“சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தின் ஊங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு”** **(குறள்.31)**

என்றும்,

அறத்தின் மூலம் வரும் இன்பமே உண்மையான இன்பமாகும், தீயவழியில் வரும் இன்பம் நிலையற்றது என்பதை,

**“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல்”** **(குறள்.39)**

என்ற குறளும் அறத்தால் விளையும் நன்மைகளை எடுத்தியம்புகிறது. மேலும், அறச்செயலைத் தத்தமக்கு ஏற்றவாறு அது நடைபெறக்கூடிய வழிகளில் எல்லாம் இடைவிடாது செய்ய வேண்டும் என்பதை,

**"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாம் செயல்"** **(குறள்.33)**

என்ற குறளும் அறத்தின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புவதைக் காணலாம்.

### நாலடியார் காட்டும் அறத்தின் வலிமை

அன்பு நெஞ்சமே, நீ அறத்தை மறந்து செல்வம் சம்பாதித்து உலகில் நிலையாக வாழலாம் என மயங்கிப் பொருள் தேடுவதிலேயே முயன்று வாழ்கிறாய். முதுமையில் மறுமைக்கு உதவிதரும் செயலாக உன்னால் என்ன செய்ய முடியும் என எண்ணிப்பார் என்று நெஞ்சை நோக்கிக் கூறுவதாக அமைந்துள்ளதை,

**"அகத்தாரே வாழ்வாரென்று அண்ணாந்து நோக்குப்**
**புகத்தாம் பெறாஅர் புறல் கடைபற்றி**
**மிகத்தாம் வருந்தியிருப்பரே மேலைத்**
**தவத்தால் தவஞ் செய்யாதார்"** **(நாலடி.31)**

என இப்பாடல் எடுத்துரைப்பதைக் காணலாம். பணம் மட்டுமே வாழ்க்கை அன்று அறம் செய்து வாழ்வதே வாழ்க்கை என்பதை இப்பாடல் புலப்படுத்துவதை இதன் கண் அறியலாம்.

### நான்மணிக்கடிகை காட்டும் அறத்தின் வலிமை

புற அழகு தரும் அணிகளைப் பெறுதற்குக் கொள்ளும் முயற்சிகளை விடுத்து அறச்செயல்களை ஆற்றுதலே சிறந்த அறம் என்பதை உணர்த்துகிறது இப்பாடல்,

**"நிலத்துக்கு அணியென்ப நெல்லுங் கரும்பும்**
**குளத்துக்கு அணியென்ப தாமரை பெண்மை**
**நலத்துக்கு அணியென்ப நாணம், தனக்கணியாம்**
**தான்செல் உலகத் தறம்"**

எனும் பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### ஆசாரக்கோவை காட்டும் அறத்தின் வலிமை

அன்றாட வாழ்வில் மக்கள் கடைபிடிக்க வேண்டிய உண்ணுதல், நீராடுதல், உடுத்தல், உறங்குதல் போன்ற அடிப்படையான ஒழுக்க நெறிகளைப் பற்றி இந்நூல் எடுத்தியம்புவதை,

**"நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்**
**நீந்தார் உமியார் திளையார் விளையாடார்"** **(ஆசாரக். 14)**

என்ற பாடலடிகளும்,

**"தேவர் வழிபாடு தீக்கானா வாலாமை**
**ஊளண்டது கான்றல் மயிர்களை லூண்பொழுது"** **(ஆசாரக். 14)**

என்னும் வரிகளாலும் அறியலாம்.

ஆடை அணிவித்தலைக் குறித்தும் ஆசாரக்கோவை நவில்வதை,

**"உடைநடை சொற்சோர்வு வைதலிற் நான்கும்**
**நிலைமைக்குங் கல்விக்கும் ஆண்மைக்குந் தத்தங்**
**குடிமைக்குந் தக்க செயல்"** **(ஆசாரக். 49)**

ஆடை அணிவித்தல் ஒரு மனிதனின் தரத்தினை உயர்த்தும் என்பதை இப்பாடல் விளக்குகிறது. இதை,

**“நீராடி கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய்**
**துண்டாரே யுண்டா ரெனப்படுவர் அல்லாதர்”** **(ஆசாரக். 18)**

என்னும் பாடலடிகள் உண்ணும் முறைப்பற்றி கூறுகிறது. இப்பாடல் அனைத்தும் மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்க கூடிய முக்கிய செயலாகக் கூறப்படுவதைக் காணலாம்.

**சிறுபஞ்சமூலம் காட்டும் அறத்தின் வலிமை**

**“பற்றினான் பற்று அற்றான் நூல் தவசி எப்பொருளும்**
**முற்றினான் ஆகும். முதல்வன் நூல் பற்றினால்**
**பாத்து உண்பான் பார்ப்பான் பழி உணர்வான் சான்றவன்**
**காத்து உண்பான் காணான் பிணி”** **(சிறுப.6)**

நீ இருக்கும் இடம் இந்த உலகத்தினால் புகழினால் நிறைய வேண்டுமானால் வறியவராய் வந்து இரந்தவர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்பாயாக என வறியவர்க்கு ஈதல் சிறப்பாகும் என்பதை இப்பாடல் கூறுகிறது.

**பழமொழிநானூற்றில் அறத்தின் வலிமை**

**“நிறையுடைமை நீர்மை உடைமை கொடையே**
**பொறையுடைமை பொய்ம்மை புலால்கண் மறையுடைமை**
**வேயன்ன தோளாய் இவையுடையான் வல்லுயிர்க்கும்**
**தாயன்ன என்னத் தகும்”**

என்ற பாடலடிகள் மனவடக்கம், நல்ல இயல்பு, ஈகை, பொறுமை, பொய்சொல்லாமை ஊன உண்ணாமை என்னும் இவற்றை உடையவன் எல்லா உயிர்க்கும் தாய் போன்றவள் என்று உயர்வாகக் கூறுகின்றது.

மணிமேகலையில் அறத்தின் வலிமை அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது,

**“அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாதிதுகேள் மண்உயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்”**

என்று விளக்கம் தருகிறது. ஒருவனுக்கு உணவு, உடை, உறையுள் தருவதே சிறந்த அறம் என்றியம்புகிறது மணிமேகலை.

**முடிவுரை**

அறமே அனைத்திற்கும் தலைமைப் பண்பாக அமைகிறது. அறக்கருத்துகள் மக்கள் இவ்வாறு வாழ்ந்தால் நன்று என்பதை எண்ணியே கூறப்பட்டதாக அமைந்துள்ளன. மக்கள் மகிழ்வுடனும் ஒழுக்கமுடனும் நெறிபிறழாத வாழ்க்கை வாழ வேண்டும் என்பதையே அறம் வலியுறுத்துவதை இக்கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.